நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 30.03.2022

**2022-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30.03.2022-ஆம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

திராவிட முன்னேற்ற கழக தலைவரும், மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சத்தியமங்கலம் நகராட்சியின் 6 வது நகர்மன்ற தலைவராக தேர்வு செய்யப்பட்ட திருமதி.ஆர்.ஜானகி மற்றும் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட திரு.ரா.நடராஜ் மற்றும் 18 வார்டுகளில் திராவிட முன்னேற்ற கழகத்தின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆதரவு அளித்து வெற்றி பெறச் செய்த இதர கட்சி உறுப்பினர்களுக்கும் சத்தியமங்கலம் நகரத்தின் பொது மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளும் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் : 01 பதிவு செய்யப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சியின் வரியினங்களான சொத்துவரி, தொழில்வரி, காலியிட வரி, குடிநீர் கட்டணம், குப்பை வரி மற்றும் வரியில்லா இனமான கடை வாடகை, குத்தகை தொகை ஆகியவைகளை 01.04.2021 முதல் 31.03.2022 வரை உள்ள ஓராண்டுக்கு எழுப்பப்பட்ட கேட்பு தொகையில் 100% சதவீதம் நிலுவையின்றி வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள், குடிநீர் பிரிவு பணியாளர்கள், அலுவலக இருக்கை எழுத்தர்கள் ஆகியோர்கள் முன்கூட்டியே 23.03.2022 அன்று முழுமையாக 100% சதவீதம் வசூல் செய்து இந்நகராட்சிக்கு பெருமை சேர்த்தமைக்கு பாராட்டி பட்டயமும், நற்சான்றிதழும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் : 02 பதிவு செய்யப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் மார்ச் 2022-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.528/2022/சி1)

தீர்மானம் எண் : 03 பதிவு செய்யப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டு உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 20221-2022 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 551/2022/பி1)

தீர்மானம் எண் : 04 அனுமதி அளிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் சத்தி 1-ல் அமைந்துள்ள நூலகம் 20 ஆண்டுகளுக்கு மேலாவதால் அதனை பராமரிப்பு செய்து கொடுக்க விதைகள் வாசகர் வட்டம் என்ற அமைப்பால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நூலக வரி கணக்கில் பராமரிப்பு செய்துக் கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பொது நிதியில் நிதி ஒதுக்கீடு இல்லாததால் நூலக வரி நிதியில் இருந்து பராமரிப்பு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

(ந. க. எண்.504/2022/அ1)

தீர்மானம் எண் : 05 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சி சத்தி-2 ரங்கசமுத்திரம் பகுதியில் புதியதாக நூலகம் அமைத்து கொடுக்க விதைகள் வாசகர் வட்டம் என்ற குழு விண்ணப்பித்துள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் அனுமதி பெற கருத்துரு அனுப்பிடவும் அதற்கு ஏற்படும் செலவினத்திற்கு நூலக வரி கணக்கில் செலவு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 06 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) - 2021-2022 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் சத்தியமங்கலம் தினசரி மார்க்கெட் மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.469.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு,முறையே தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 06.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாநில அளவில் டெண்டர் விளம்பரம் முரசொலி தமிழ் பிரதி (தமிழகம்), Financial Express (தென் இந்தியா) ஆங்கில பிரதி ஆகிய பிரதிகளில் டெண்டர் விளம்பரம் செய்தமைக்கு Sudha Ads, 55 KSC School Road,Tiruppur -641604 நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.50350/- வழங்குமாறு பட்டியல் வழங்கியுள்ளார்கள். பில் பட்டியல் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2020-2022 ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம் 2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண். 796/2021/இ1)

தீர்மானம் எண் : 07 மன்றம் அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறை கடந்த 5 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்ததால் ஏ.சி. மெசின் மற்றும் மேஜை, சுவர் வண்ணப்பூச்சு, Fan மற்றும் விளக்கு வசதி, ஜன்னல் கொசு வலை அடித்தல், மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் முன்னாள் முதல்வர் புகைப்படம் வைத்தல் மற்றும் தற்காலிக தடுப்பு அமைத்தல் ஆகியவை பொருத்த நகர்மன்ற தலைவர் பயன்படுத்த ஏதுவாக மாற்றம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.90 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.வருவாய் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 08 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் போதுமான அறைகள் இல்லாததால் உள்ளாட்சி நிதித்தணிக்கை அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய இயலவில்லை. எனவே நகராட்சி அலுவலகத்தில் முதல் மாடியில் புதியதாக கட்டிடம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2.சிறந்த நகராட்சிக்கான முதல் பரிசு 2016-17 ல் பெற்ற ரூ.15.00 இலட்சத்தில் இருந்து பணியை ஒப்பந்தப்புள்ளி கேட்டு மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 09 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 9

இந்நகராட்சிக்குட்பட்ட நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூடத்தில் மன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர் மற்றும் அலுவலர்கள் அமர்வதற்கு நாற்காலியும், நகர்மன்ற தலைவர் அறையில் பீரோவும் வாங்க உத்தேச செலவினம் ரூ.4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்படி செலவினத்தை புன்செய்ப் புளியம்பட்டி சர்வோதய சங்கம் மூலம் கொள் முதல் செய்யலாம்.

அலுவலக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2.வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 10 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 10

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்திற்கு 27 வார்டுகளில் 101 ஆழ்குழாய் கிணறு மின் விசை பம்புகள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி குடிநீர் மற்றும் ஆழ்குழாய் மின் மோட்டார்கள் வறட்சியின் காரணமாகஅடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மேற்படி பழுதுகளை நீக்கம் செய்ய அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யவும் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றை ஆழப்படுத்திடவும் புதியமோட்டார் பொருத்தவும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும்.இப்பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகுறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 11 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கெஞ்சனூர் சாலை மற்றும் பேருந்து நிலையம் செல்லும் கோபி மெயின் ரோடு ஆகியவற்றில் நெடுஞ்சாலை துறை வடிகால் மற்றும் சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.இதனால் மேற்கண்ட சாலையில் செல்லும் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்கள் பழுது ஏற்பட்டுள்ளது.அவற்றை மாற்றம் செய்ய நெடுஞ்சாலை துறையினர் கேட்டு கொண்டதற்கு இணங்க பைப்லைன்கள் மாற்றம் செய்ய வேண்டி உள்ளது.மேலும்,சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் - திருப்பூர் கோட்டம் -சத்தியமங்கலம் நகராட்சி க.ச.எண்.308/1 பகுதி சத்தியமங்கலம் கிராமம் குள்ளங்கரடு (PMAY HFA) -Vertical III (Affordable Housing in Partnership) - Drinking Water Supply குடிநீர் வசதிகள் மேற்கொள்ள நகராட்சிக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.எனவே,மேற்கண்ட இடத்திற்கு பகிர்மான குழாய் அமைக்க வேண்டியுள்ளது. எனவே,மேற்கண்ட பணிகள் கெஞ்சனூர் ரோடு,பேருந்து நிலையம் செல்லும் கோபி மெயின் ரோடு ஆகியவற்றிக்கு பைப்லைன் அமைக்கவும்,எம்.ஜி.ஆர். நகரில் பொதுகழிப்பிடத்திற்கு 2 HP நீர் மூழ்கி மின் மோட்டார் புதிதாக வாங்கிடவும்,மதிப்பீடு ரூ.495000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.மேற்காணும் பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மதிப்பீடுக்கு அனுமதியும் ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)2022-2023 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், வரவு-செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 12 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 12

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குடிநீர் விநியோகத்தில் 27 வார்டுகளில் 39.892 கி.மீ.அளவிற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் உள்ளன. மேற்படி குடிநீர் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகி சாலையில் செல்கிறது. நகராட்சி பகுதியில் குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செயல்படுத்த உடைப்புகள் சரி செய்யும் பொருட்டு அவ்வப்போது தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதம் ஏற்படுவதால் சீரான விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் விநியோகம் அவசியம் கருதி பொதுமக்கள் நலன் கருதி உடைப்புகள் சரி செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2022-2023 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண்.100/2016/இ1)

தீர்மானம் எண் : 13 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 13

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் உதவி செயற் பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி மற்றும் ஈரோடு மாவட்ட சுகாதார துறை துணை இயக்குநர் தொலைபேசி செய்தியின்படியும், சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி மூலம் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கும், மண் பரிசோதனை கட்டிடம் கட்ட கட்டிட வடிவமைப்பு ஆகியவற்றிற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2.2021-2022 திருத்திய வரவு செலவு திட்டத்தில் இச்செலவினத்ததை சேர்த்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 452/2022/ஈ1)

தீர்மானம் எண் : 14 அனுமதி அளிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 14

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை (நிலை) எண். 752 நாள். 08.08.1990 மற்றும் அரசாணை எண். 2196 நாள். 20.11.1951 ஆகிய அரசாணைகளின் கீழ் இந்நகராட்சியின் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குப்பை வரி, காலியிட வரி, வரியில்லா இனங்கள் ஆகியவைகளை வசூலிக்கப்பட வேண்டிய கேட்பில் 100% சதவீதம் நிலுவையின்றி 2021-2022 ஆம் ஆண்டிற்கு வசூலிக்கப்பட்டமைக்கு வருவாய் உதவியாளர்களுக்கு அவர்கள் பெறும் ஊதியத்தில் ஒரு மாத அடிப்படை ஊதியத்தை ஊக்கத் தொகையாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்பபடுகிறது.

அலுவலகக்குறிப்பு :
2021-2022 ஆம் ஆண்டு சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், குப்பைவரி, காலியிட வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவைகளை கேட்பில் 100% சதவீதம் முழுமையாக வசூல் செய்தமைக்கு அரசு ஆணைக்கிணங்க ஊக்கத்தொகை வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மற்றும் அச்செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 15 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 15
இந்நகராட்சி அனைத்து பிரிவு உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், அறிக்கை படிவங்கள் மற்றும் அம்மா உணவகம் டோக்கன்கள் வரும் 2022-2023 ஆம் நிதியாண்டில் வாங்கிக் கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/- க்கு ( ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அரசு பதிவு பெற்ற அச்சக சேவா தொழிற் கூட்டுறவு சங்கம் மூலம் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு :
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந. க. எண். 432/22022/அ3)

தீர்மானம் எண் : 16 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 16

இந்நகராட்சி அனைத்து பிரிவிற்கும் தேவையான கணினி பிரிண்டர் டோனர்கள், கணினி C.F.C இரசீதுகள் மற்றும் ரிப்பன் பிரிண்டர் வரும் 2022-2023 ஆம் நிதியாண்டில் வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/- க்கு ( ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அரசு பதிவு பெற்ற கூட்டுறவு அச்சக சேவா சங்கம் மூலம் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
தீர்மானம் எண் : 18 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 17

இந்நகராட்சியில் சாலைகள் மொத்த நீளம் 116 கி.மீ ஆகும்.இந்த நிளத்தில் 40.00 கி.மீ அளவிற்கு பகிர்மான குடிநீர் குழாய் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோக செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள குடியிருப்புகளுக்கு போதிய குடிநீர் வசதிகள் இல்லாத காரணத்தினால் அப்பகுதிகளுக்கு குடிநீர் டேங்கர் லாரி மூலம் சப்ளை செய்யப்பட்டு வந்துள்ளது.தற்போது விநியோகம் செய்து வரும் குடிநீர் டேங்கர் லாரி பழுது ஏற்பட்டுள்ளதால் மாற்று ஏற்பாடாக தனியார் குடிநீர் லாரி மூலம் சப்ளை செய்ய உத்தேசமாக ரூ.40000/- ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும்,குடிநீர் அத்தியவசிய பணிகள் என்பதாலும் **நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.15 இன் கீழ் (Section 15)**

மேற்கொள்ளப்பட்டதற்கும்,பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் நகர் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)2022-2023 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியலில் சேர்த்து கொள்ளலாம்.

3)இப்பணி முடிக்கப்பட்டமைக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கப்படுகிறது.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 18 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 18**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 க்கு உட்பட்ட குள்ளங்கரடு பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பொது உபயோகத்திற்கு தண்ணீர் வசதி இல்லை. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே,மேற்கண்ட இடத்தில் பொதுக்கழிப்பிடத்திற்கு ஆழ்குழாய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து உபயோகப்படுத்தி வருகிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்து பைப்லைன் நீட்டிப்பு செய்தும், அங்குள்ள தெருக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய HDPE Tank Platform மற்றும் 2000 லிட்டர் கொள்ளளவு உள்ள HDPE தொட்டியும், வாங்கி பொருத்தி பைப்லைன் நீட்டிப்பு செய்வதற்கு ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றினை ஆழ்ப்படுத்தி பணிகள் மேற்கொள்ளவும், மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது, இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)2022-23 ஆம் ஆண்டு நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 19 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 19**

சத்தியமங்கலம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-2021 கீழ் **சிப்பம் எண். 2 இல் சாலை பணிகளுக்கு ரூ.103.00 இலட்சம் (சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.92.70 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10.30 இலட்சம்)**நிதி ஒதுக்கீடு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.512 நாள்.29.01.2021 இல் ஒப்பந்தம் வழங்கியதின்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றது. இப்பணி மேற்கொள்ளும் போது கீழ்கண்ட அட்டவணையில் உள்ள இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவிற்கு (Quantity) மேல் கூடுதலாக செய்யப்பட்டமைக்கும், மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்கள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

i) மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவை (Quantity) விட கூடுதலாக செய்தது

| வ.எண். | மதிப்பீட்டில் வழிவகை செய்த இனம் | அனுமதிக்கப்பட்ட அளவு (Qty) | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு(Qty) |
|---|---|---|---|
| 1 | Picking | 2690 Sqm | 569.89 Sqm |

ii) மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்கள் - ஏதுவும் இல்லை.

iii) மேற்படி அட்டவணைப்படி மதிப்பீட்டில் வழிவகை செய்த (Quantity) அளவைவிட கூடுதல் சாலை தன்மைக்கு ஏற்ப ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிவுரைப்படியும் மொத்த மதிப்பீட்டிற்கும் மிகாமல் மேற்கொண்டதையும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.92.70 இலட்சம் பெற்றால் வட்டி மற்றும் அசல் நகராட்சிக்கு சுமை ஏற்படுவதால் மேற்படி தொகையை

நகராட்சி நிதியில் வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) சிறப்பு சாலை திட்ட கடன் ரூ.92.70 இலட்சம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.520/2020/இ1)

தீர்மானம் எண் : 20 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 20

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.19 க்கு உட்பட்ட மாரியம்மன் கோவில் வீதி,பிள்ளையார் கோவில் வீதிகளில் உள்ள HDPE Tank இருந்து அருகில் உள்ள தெருக்களுக்கு பைப்லைன் நீட்டிப்பு செய்தல் மற்றும் சிறுபாலம் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடத்திற்கு கம்பி வேலி (Fencing) வசதி செய்து மராமத்து பணிகள் மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடத்திற்கு European Closet பொருத்துதல் மற்றும் கதவுகள் எலக்ட்டிரிகல் வேலை மராமத்து பணிகள் ஆகியவற்றிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)2022-23 ஆம் ஆண்டு நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம், 2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 21 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 21

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு வைரஸ் ஒழிக்கும் மென்பொருள் வாங்கவும் (Anti Virus Software ), ஆண்டு பராமரிப்பு (Annual Maintenance Contract) ஆகிய பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு முறையே 18.3.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒரு பணிக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | Purchase of Antivirus Software to all Computers in Sathyamangalam Municipality | ரூ.100 000/- | M/s.Syscon Systems 28/1 Selva Nagar KK Pudhur Road Coimbatore | ரூ.73500/- |
| | | | M/s.Sagar Electronics 111/79 Vallvar Street Venkateswa Colony | ரூ.80500/- |
| 2 | Annual Maintiance for all Computers,Printers, Scanner ,Networking, UPS etc.., in Sathyamangalam Municipality | ரூ.495 000/ | M/s.Syscon Systems 28/1 Selva Nagar KK Pudhur Road Coimbatore | ரூ.416100/- |
| | | | M/s.Sagar Electronics 111/79 Vallvar Street Venkateswa Colony | ரூ.420640/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Syscon Systems 28/1 Selva Nagar,KK Pudhur Road,Coimbatore ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)குறைவான ஒப்புந்தப்புள்ளி வழங்கிய M/s.Syscon Systems 28/1 Selva Nagar KK Pudhur Road,Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கலாம்.

தீர்மானம் எண் : 22 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் -2020-2021 கீழ் **சிப்பம் எண். 3 இல் சாலை பணிகளுக்கு ரூ.117.00 இலட்சம் சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.105.30 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.11.70 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.512 நாள்.29.01.2021 இல் ஒப்பந்தம் வழங்கியதின்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றது. இப்பணி மேற்கொள்ளும் போது கீழ்கண்ட அட்டவணையில் உள்ள இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவிற்கு (Quantity) மேல் கூடுதலாக செய்யப்பட்டமைக்கும், மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்கள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

I. மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவை (Quantity) விட கூடுதலாக செய்தது

| வ.எண். | மதிப்பீட்டில் வழிவகை செய்த இனம் | அனுமதிக்கப்பட்ட அளவு (Quantity) | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு(Qty) |
|---|---|---|---|
| 1 | எதுவும் இல்லை | | |

II. மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்கள் - எதுவும் இல்லை

III.மேற்படி அட்டவணைப்படி மதிப்பீட்டில் வழிவகை செய்த (Quantity) அளவைவிட கூடுதல் சாலை தன்மைக்கு ஏற்ப ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிவுரைப்படியும் மொத்த மதிப்பீட்டிற்கும் மிகாமல் மேற்கொண்டதையும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.105.30 இலட்சம் பெற்றால் வட்டி மற்றும் அசல் நகராட்சிக்கு சுமை ஏற்படுவதால் மேற்படி தொகையை நகராட்சி நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)சிறப்பு சாலை திட்ட கடன் ரூ.105.30 இலட்சம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 23 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் -2020-2021 கீழ் **சிப்பம் எண். 1 இல் சாலை பணிகளுக்கு ரூ.180.00 இலட்சம் சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.162.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.18.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி நகர்மன்ற தீர்மான எண்.512 நாள்.29.01.2021 இல் ஒப்பந்த வழங்கியதின்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு நிறைவுற்றது.இப்பணி மேற்கொள்ளும் போது கீழ்கண்ட அட்டவணையில் உள்ள இனங்கள் மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவிற்கு (Quantity) மேல் கூடுதலாக செய்யப்பட்டமைக்கும்,மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத புதிய இனங்கள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

I. மதிப்பீட்டில் வழிவகை செய்து அனுமதிக்கப்பட்ட அளவை (Quantity) விட கூடுதலாக செய்தது

| வ.எண். | மதிப்பீட்டில் வழிவகை செய்த இனம் | அனுமதிக்கப்பட்ட அளவு (Quantity) | கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அளவு(Qty) |
|---|---|---|---|
| 1 | Tack Coat 2.50 Kg | 3075 Sqm | 535.71 Sqm |

II. மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனங்கள் - ஏதுவும் இல்லை

III. மேற்படி அட்டவணைப்படி மதிப்பீட்டில் வழிவகை செய்த (Quantity) அளவைவிட கூடுதல் சாலை தன்மைக்கு ஏற்ப ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அறிவுரைப்படியும் மொத்த மதிப்பீட்டிற்கும் மிகாமல் மேற்கொண்டதையும் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் சிறப்பு சாலைகள் திட்ட கடன் ரூ.162.00 இலட்சம் பெற்றால் வட்டி மற்றும் அசல் நகராட்சிக்கு சுமை ஏற்படுவதால் மேற்படி தொகையை நகராட்சி நிதியில் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)சிறப்பு சாலை திட்ட கடன் ரூ.162.00 இலட்சம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.520/2020/இ1)

தீர்மானம் எண் : 24 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 24

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண்.TN 36 Y 0200 மற்றும் TN 36 AZ8821 **2022 -2023 க்கான ஒரு ஆண்டிற்கான வாகன சாலை வரி கட்டணம் ரூ.10646/- , பசுமை வரி ரூ.510/- ஆன்லைன் கட்டணம் ரூ.140/- ஆக மொத்தம் ரூ.11296 /-** மற்றும் **வாகன சாலை வரி கட்டணம் ரூ.5710/- , பசுமை வரி ரூ.510/- ஆன்லைன் கட்டணம் ரூ.120/- ஆக மொத்தம் ரூ.6340 ஆகும்.** மேற்படி வாகனங்களுக்கு **01.04.2022 முதல் 31.03.2023 வரை** வட்டார போக்குவரத்து துறைக்கு செலுத்தப்பட வேண்டும் என்று திரு.ஆா.சந்திரன் ஓட்டுநர், சத்தியமங்கலம் நகராட்சி அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே,மேற்கண்ட தொகை **ரூ.11296/- + ரூ.6340 = 17636 /-** ஐ நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)2022-2023 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், 2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.
3)இந்நகர் மன்றத்தின் தலைவர் அவர்களின் முன் அனுமதியை நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.486/2022/இ1)

தீர்மானம் எண் : 25 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 25

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் கழிவுகளை (புஸ்காட் வண்டி) தள்ளுவண்டி மூலம் தரம் பிரித்து பெறப்பட்டு வருகிறது.
மேலும் (புஸ்காட் வண்டி) தள்ளு வண்டிகள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி உள்ளது.
எனவே அதற்கான பராமரிப்பு மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ.2,00,000/- திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்பப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும் பராமரிப்பு பணிகள் செய்து கொள்ளவும் அதற்கான விலைப்புள்ளி உள்ளூர் நிறுவனத்தின் மூலம் பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 26 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 26

சத்தியமங்கலம் நகராட்சியின் உரகிடங்கில் உள்ள மக்கும் கழிவுகளை அறைவை செய்யும் இயந்திரங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு விடுவதால் அப்பழுதுகளை பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி உடனுக்குடன் பழுதுகளை சரி செய்யவும் (E.M. Solution) தயார் செய்தல் மற்றும் பிளாஸ்டிக் பேலிங் செய்யும் பொருட்கள் பெற வேண்டியுள்ளது.

எனவே பராமரிப்பு (O&M) செய்திட தேவையான உத்தேச செலவின தொகை ரூ.9,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வும் (E.M. Solution) தயார் செய்யும் பொருட்கள் வாங்குதல், பிளாஸ்டிக் பேலிங் செய்ய பொருட்கள் வாங்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 27 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

பொருள் : 27

பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார வாகனங்களுக்கு சாலை மற்றும் பசுமைவரி ஆகியவைகளை கீழ்க்கண்ட பட்டியல் உள்ளபடி ஆன்லைன் (Online) மூலம் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளது.

| வ. எண் | வாகனம் எண் | செலுத்த வேண்டி காலம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN36AQ4510 | 01.04.2022 | 7226/- |
| 2 | TN36Y6881 | 01.01.2022 | 5950/- |
| 3 | TN36X0879 | 01.04.2022 to 31.03.2023 | 8236/- |
| 4 | TN36Z1229 | 01.04.2022 | 6215/- |
| 5 | TN36Z3643 | 01.04.2022 to 31.03.2023 | 4688/- |
| | | ஆன் லைன் கட்டணம் | 32315/-<br>760/- |
| | | மொத்தம் | 33075/- |

**அலுவலகக்குறிப்பு :**

பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி வாகனங்களுக்கு சாலை வரி மற்றும் பசுமை வரி ரூ.33075/- ஐ செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 28 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 28**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் கழிவுகளை BOV பேட்டரி வாகனம் மூலம் தரம் பிரித்து பெறப்பட்டு வருகிறது.

மேலும் BOV வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது.

எனவே அதற்கான வருடாந்திர பராமரிப்பு (OM) மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.10,00,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து கொள்ளவும் பராமரிப்பு செய்து கொள்ளவும் அதற்கான விலைப்புள்ளி பெற்று பணிகளை செய்து கொள்ளவும் அவ்வப்போது ஏற்படும் செலவினங்களை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 29 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 29**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு பழுதுகளை நீக்கம் செய்திட ஆகும். உத்தேச செலவின தொகை ரூ. 5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 30 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 30**

இந்நகராட்சிக்குட்பட்ட கட்டபொம்மன் நகர் மேல்நிலைத் தொட்டி, திருவள்ளுவர் திடல் மேல்நிலைத்தொட்டி வளாகம், தோப்பூர் காலனி கழிப்பிடம் மற்றும் தலைமை குடிநீரேற்று நிலையம் வளாகம் மேம்பாடு செய்ய வேண்டி உள்ளது. இந்நகராட்சியில் 15-வது மத்திய நிதி குழு (CFC) 2021-2022ல் Untide Grant ரூ.40.00 இலட்சத்திற்கு பணிகள் தேர்வு செய்யப்படாமல் உள்ளது. எனவே 15-வது மத்திய நிதி குழு (CFC) 2021-2022 Untide Grant-ல் கீழ்காணும் பணிகளை தேர்வு செய்யலாம்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ( இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கட்டபொம்மன் நகர் வளாகத்தில் பேவர் ப்ளாக்,மேல்நிலைத்தொட்டி பராமரித்தல் மற்றும் சுற்று சுவர் கட்டும் பணி. | ரூ.10.00 இலட்சம் |
| 2. | திருவள்ளுவர் திடல் மேல்நிலைத்தொட்டி வளாகத்தில் பேவர் ப்ளாக்,சுற்று சுவர் மராமத்து, வால்வு மாற்றுதல் பணி. | ரூ.10.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 3. | தோப்பூர் காலனி கழிப்பிடம் புதுப்பித்தல் பணி. | ரூ.10.00 இலட்சம் |
| 4. | தலைமை குடிநீரேற்று நிலைய வளாகத்தில் பேவர் ப்ளாக்,சுற்று சுவர் மராமத்து, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.10.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ.40.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் பணிகளை 15--வது மத்திய நிதி குழு (CFC) 2021-2022ல் Untide Grant பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்ப மன்றம் அனுமதி அளிக்கலாம்

**(ந. க. எண்.1770/2021/இ1)**

தீர்மானம் எண் : 31 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 31**

சத்தியமங்கலம் நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தெரு நாய்களை கண்டறிந்து பிடித்து அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறவனம் (NGO) மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடவும் மற்றும் ரேபிஸ் நோய் தடுப்பூசி ANTI RABIES VACCINE (ARV) நாய்களுக்கு செலுத்திடவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,50,000/- ஆகும். நாய் ஒன்றுக்கு ரூ.445/- வீதம் மொத்தம் 300 நாய்களுக்கு ரூ.1,50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம்அனுமதிக்கலாம். (ந. க. எண்.580/2022/எச்.1)

தீர்மானம் எண் : 32 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**பொருள் : 32**

சத்தியமங்கலம் நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.22.00 இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர்,அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.27519-13/2021/பி 2 நாள்.24.01.2022 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.முறையே தொழில் நுட்ப அனுமதி வழங்கி ஒப்பந்தப்புள்ளி 24.03.2022 அன்று கோரி மொத்த மூன்று பணிகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1)**Construction of Indoor Shuttle stadium and walking track at Bharathi Nagar in Sathyamangalam Municipality. (NNT -2021-2022)**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.10.00 இலட்சம் | ரூ.903033 /- | மதிப்பீடு தொகையினை விட 4.98 சதவீதம் அதிகம் |
| | M/s.VBN Builderrs Contractor Tiruppur | | ரூ.972908/- | மதிப்பீடு தொகையினை விட 7.74 சதவீதம் அதிகம் |
| 2) **Construction of Busshelter with Renovation of Clock Tower in Sathyamangalam Municipality. (NNT -2021-2022)** | | | | |
| 2 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.6.00 இலட்சம் | ரூ.494391 /- | மதிப்பீடு தொகையினை விட 4.98 சதவீதம் அதிகம் |
| | M/s.VBN Builderrs Contractor Tiruppur | | ரூ.512526/- | மதிப்பீடு தொகையினை விட 8.83 சதவீதம் அதிகம் |

<table>
<tr><td colspan="5">3) Providing New Ladies Park at Lakshmi Nagar in Sathyamangalam Municipality. (NNT -2021-2022)</td></tr>
<tr><td rowspan="2">3</td><td>M/s.Vino Constructions Contractor<br>Bhavani Sagar</td><td rowspan="2">ரூ.6.00 இலட்சம்</td><td>ரூ.539356 /-</td><td>மதிப்பீடு தொகையினை விட 4.98 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>M/s.VBN Builderrs Contractor<br>Tiruppur</td><td>ரூ.548827/-</td><td>மதிப்பீடு தொகையினை விட 6.83 சதவீதம் அதிகம்</td></tr>
</table>

மேற்கண்ட திட்டத்திற்கு மொத்தம் மூன்று பணிகளுக்கு M/s.Vino Constructions Contractor Bhavani Sagar மற்றும் M/s.VBN Builderrs Contractor Tiruppur அவர்கள் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார்கள்.குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions Contractor Bhavani Sagar தலா ஒரு பணிக்கு மதிப்பீடு தொகையினை விட 4.98 சதவீத கூடுதலாக வழங்கியுள்ளார். உரிய காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டும் என்பதாலும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் கால தாமதம் ஏற்படும் என்பதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர் கை யேடு பகுதி -1 பாகம் 2.7.2 இன் படி ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.901/2021/இ1)

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மூன்று பணிகளுக்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions Contractor Bhavani Sagar அவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் : 33 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.03.2022

**நாள் : 30.03.2022**

**(ஒப்பம்) ஆர்.ஜானகி,**
**நகர்மன்ற தலைவர்,**
**சத்தியமங்கலம் நகராட்சி.**

**// உண்மை நகல்//**

**ஆணையாளர்,**
**சத்தியமங்கலம் நகராட்சி.**